திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. காவிரி கயவாய்ப் பகுதியில் உள்ள வடிகால் திட்டங்களுக்கு ரூபாய் 6·30 கோடி செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டங்களுக்காக உலக வங்கியிடம் மத்திய அரசாங்கத்தின்மூலம் கடன் உதவி கோரியிருக்கிறோம். கிடைக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. எம். பூபதி : தலைவரவர்களே, உலக வங்கியின் அதிகாரிகள் காவிரி கயவாய்ப் பகுதியைப் பார்வையிட்டதைப்போல வேறு எந்தெந்தப் பகுதிகளைப் பார்வையிட்டார்கள் ? அதைப்பற்றி கருத்துரைகள் ஏதாவது வழங்கினார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : காவிரி கயவாய்ப் பகுதியை மட்டும்தான் பார்வையிட்டார்கள்.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே, காவிரி கயவாய்ப் பகுதியைச் செப்பனிடத் தயாரிக்கப்பட்ட திட்டத்தை அங்கத்தினர்களுக்கு அரசாங்கம் வழங்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : விவரக் குறிப்பை இப்பொழுது கொடுப்பதற்கில்லை.

கடில நதியின் குறுக்கே பாலம்.

*559 வினா—திரு. மு. கந்தசாமி படையாச்சி : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உளுந்தூர்பேட்டையிலிருந்து திருவெண்ணெய்நல்லூர், 20-வது மைல் தூர பாதையில் உள்ள கடிலம் நதிமீது பாலம் கட்டும் திட்டம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு அதற்கான பணம் ஒதுக்கப்பட்டதா ?

(இ) ஆம் என்றால், எப்பொழுது அவ்வேலை நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) உளுந்தூர்பேட்டை—திருவெண்ணெய்நல்லூர் சாலை 21/1-வது மைலில் கடிலம் ஆற்றின் குறுக்கே ரூ. 80,000 செலவில் பாலம் ஒன்று கட்டும் திட்டம் மாவட்ட வாரியத் தலைப்பின்கீழ் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப் பட்டது. ஆனால் பாலம் கட்டுவதற்காகும் செலவு அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டதால் பின்னர் இது நிறைவேற்றுவதற்காக மேற்கொள்ளப்படவில்லை.

(இ) நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மத்திய சாலை நிதித் திட்டத்தின்கீழ் இப்பணியை நிறைவேற்றுவது குறித்து ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது. இப்பணிக்கு இந்திய அரசு இசைவு அளித்து இப் பணிக்காகப் போதிய நிதி ஒதுக்கப்பட்டால் நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இப்பணி நிறைவேற்றப்படுவதற்காக மேற்கொள்ளப்படும்.

திரு. மு. கந்தசாமி படையாச்சி : தலைவரவர்களே, இந்த கடிலம் நதியில் பாலம் கட்டும் திட்டத்தை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்தும் இதுவரையில் எடுத்துக்கொள்ளாததற்குக் காரணம் என்ன ? அப்படிப் பணம் ஒதுக்கியும் அதைச் செய்யாததைப்பற்றி, அங்கேயுள்ள அதிகமான மக்களுக்குப் போக்குவரத்துத் தொல்லை அதிகமாக இருப்பது சர்க்காருக்குத் தெரியுமா ? நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எடுத்து, எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் திட்ட முதலீட்டைப்போல இரண்டு மடங்கு முதலீடு செய்வதற்கென வகை செய்யப்பட்டிருந்தது. எனவே

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு ஆட்சித் தலைவரால் இசைவளிக்கப்பட்ட பணிகள் அனைத்தையும் செலவின்மேல் வரம்பிற்குள் மேற்கொள்ள இயலவில்லை. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் தொழிற்பகுதியிலுள்ள பணிகளைமட்டுமே மேற்கொள்ள முதலிடம் கொடுக்கப்பட்டிருந்ததால் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் இந்தப் பணியை மேற்கொள்ள இயலவில்லை. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல், மத்திய அரசு இசைவு கொடுத்தால் இந்த வேலை துவங்கப்படும்.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவரவர்களே, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தினுடைய எஸ்டிமேட் என்ன ? நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எவ்வளவு எஸ்டிமேட் போட்டிருக்கிறார்கள் ? அதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இத் திட்டத்திற்கு சுமார் 10 லட்சம் ரூபாய் செலவாகும் என்று இப்பொழுது மதிப்பிடப்படுகிறது.

Meenambakkam Air Port.

*560 Q.—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the Air Lines Corporation has consulted the Tamil Nadu Government about the expansion of the Meenambakkam Air Port?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

Dr. H. V. HANDE : With regard to the aerodrome is it not a fact that the Government of Tamil Nadu has suggested certain recommendations and is it not a fact that the present aerodrome is insufficient to allow Boeings and other big planes to freely come and go? May I also know whether the aerodrome is going to be developed as an inter-national airport? What suggestions have this Government offered to aerodrome authorities or the Central Ministry concerned with regard to this aerodrome?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்த விமான நிலையத்தை விரிவுபடுத்துவதுபற்றி இந்திய விமானப் போக்குவரத்துக் கழகம் மாநில அரசாங்கத்துடன் கலந்தாலோசிப்பதில்லை. ஆனால் ஒரு புதிய விமானப் போக்குவரத்து வசதிக்கேற்ற தளம் மீனம்பாக்கத்தில் அமைக்கப்பெறவேண்டும். அதுவும் மேலாக பகுதி விமானக் கூடம் அமைப்பது என்ற அடிப்படையில் உள்நாட்டு போக்குவரத்துக்கும், வெளிநாட்டுப் போக்குவரத்துக்கும் ஏற்றதான வகையில் தற்போதுள்ள விமானக்கூடம் பாதை ஆகியவற்றிற்கு ஒட்டினாற்போலவும், அவற்றுக்கு தென்-மேற்கேயுள்ள நிலங்களிலும் தளத்தை அமைக்கவேண்டும். இம் மேம்பாட்டுக்கான மதிப்பீட்டுச் செலவு ரூபாய் 18·28 கோடி என இப்பொழுது கணக்கிடப்பட்டுள்ளது

திரு. மு. ச. சிவசாமி : தலைவரவர்களே, தமிழகத்தில் இப்பொழுதிருக்கும் நான்கு விமான தளங்களைத்தவிர, வேறு புதிய விமான தளங்கள் அமைக்க தமிழக அரசு சிபாரிசு செய்திருக்கிறதா? சிபாரிசு செய்திருக்கிறது என்றால், தூத்துக்குடி அதில் சேர்க்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தூத்துக்குடியில் விமான தளம் அமைக்கும் செயற்குறிப்பு நம்முடைய அரசாங்கத்தில் இல்லை. மாண்புமிகு உறுப்பினரவர்கள் தூத்துக்குடிக்கு விமானதளம் வேண்டுமென்று விண்ணப்பம் கொடுத்தால் அதைக்கொண்டு மத்திய அரசுக்கு சிபாரிசு செய்யலாம்.